**<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>**
<u>MCOP No: 29/2024</u>

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 03 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | கந்தசாமி |
| த.க.பெயர் | சென்ராயன் |
| கிராமம் | தர்மபுரி |
| மாவட்டம் | |
| வயது | 47 |

<u>ம.சா. 1 நாள் 03.07.2026</u>

**<u>முதல் விசாரணை:</u> (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் இம்மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.2 |
| 3. | பார்வை மகசர் | ம.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (இரு சக்கர வாகனம்) | ம.சா.ஆ.4 |
| 5. | காயச்சான்றிதழ் | ம.சா.ஆ.5 |
| 6. | குற்ற இறுதியறிக்கை | ம.சா.ஆ.6 |
| 7. | மனுதாரரின் ஆதார் அட்டை | ம.சா.ஆ.7 |
| 8. | மருத்துவமனை சிகிச்சை ஆவணம் | ம.சா.ஆ.8 |
| 9. | காப்பீட்டு சான்று | ம.சா.ஆ.9 |
| 10. | பதிவு சான்று | மசாஆ 10 |
| 11 | 1 ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 11 |
| 12 | மருத்துவக் குழுமத்தினால் வழங்கப்பட்ட ஊனச் சான்று | நீமசாஆ 1 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

**குறுக்கு விசாரணை (3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து நடந்த சாலை கிழமேல் சாலை. நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டை பார்த்து நின்றிருந்தேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1 ம் எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து தான் வாகனத்தை ஓட்டினார் என்றும் நான் தான் திடிரென சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது அஜாக்கிரதை தான் காரணம என்றால் சரியல்ல. நான் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். எனக்கு வலது காலிலும் இடது கைதோள் பட்டையிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமடைந்து விட்டது என்றும் நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது தொழில் மற்றும் வருமானத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. விபத்தினால் எனக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.07.03 16:06:22 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS